தலைவர் பெருவளையம் ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திரு.சி.குமரேசன்.,

பெருவளையம் ஊராட்சி/மனைப்பிரிவு எண்.01/2024 நாள்: 05 .03.2024.

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - இராணிப்பேட்டை மாவட்டம் - நெமிலி வட்டம் - காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், பெருவளையம் ஊராட்சி – கிராமம் சர்வே எண்: 451/1A, மற்றும் 451/4, 3.37-ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு வழங்கி ஆணைகள் வரப்பெற்றது – மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:

1. இராணிப்பேட்டை மாவட்டம், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் இணையதள விண்ணப்ப எண்:RPT/J2U7MBF3/20022/2024/TCP நாள்:07.02.2024.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ நாள்:24.12.2020.
3. அரசாணை எண்:138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:04.05.2017
4. அரசாணை எண்:79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3)த் துறை நாள்:04.05.2017.
5. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020.
6. அரசாணை எண்:141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD.4(3), நாள்:23.09.2020.
7. அரசாணை எண்:181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD.4(1), நாள்:09.12.2020.
8. அரசு கடிதம் எண்:19113/நவ4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:30.08.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:7978/2047/LA1, நாள்:08.09.2017.
10. தானப்பத்திர ஆவணம் எண்: 338/2024, நாள்: 31.01.2024.
11. பெருவளையம் ஊராட்சி மன்ற தீர்மான எண். 157 நாள்:05.03.2024.

<><><><><><><><><>

பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி, இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், பெருவளையம் ஊராட்சி கிராமம் சர்வே எண் 451/1A மற்றும் 451/4 –ல் 3.37 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு ம.வ./மா.ந.ஊ.உ.இ.(ரா.மா) எண்:14/2024 என எண்ணிட்டு அங்கீகரித்து கொள்கையளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி வரைபடத்தில் அடங்கிய மனை எண்.01 முதல் 68 மனைகளுக்கு கீழ்க்காணும் விவரப்படி உரிய கட்டணம் உரிய அரசுத்தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

தடையில்லாச்சான்று வழங்கும் மனைகளின் விவரம்

வ. எண்	மொத்த மனைகளின் எண்ணிக்கை	மொத்த பரப்பளவு/ஏக்கர்
1.	1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19,20,21,22,23, 24,25,26,27,28,29,30,31,32,33,34,35,36,37,38,39,40,41,42, 43,44,45,46,47,48,49,50,51,52,53,54,55,56,57,58,59,60,61, 62,63,64,65,66,67 மற்றும் 68	3.37 ஏக்கர்

வ. எண்	கட்டணத்தின் தன்மை				
	வளர்ச்சிக்கட்டணம் பெருவளையம் ஊராட்சி Account No:7387897305 செலுத்திய விவரம்		வரன்முறைக் கட்டணம் DPCODE-2017-60-800AS-22709 செலுத்திய விவரம்		
	நாள்	தொகை ரூ.	கருவூலத்தின் பெயர் / வங்கியின் பெயர்	செலான் எண்/நாள்:	தொகை ரூ.
1	04.03.2024	70000	Online Payment	20240305007161/ 05.03.2024	22747

Scanned with CamScanner

அதன்படி, தற்போது வழங்கப்படும் இந்த தடையில்லாச்சான்று மேற்படி மனைகளுக்கு மட்டும் பொருந்தும் மனையில் அமையும் கட்டிடம் வரன்முறையாக கருதப்படமாட்டாது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் இராணிப்பேட்டை அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது. மேலும் மாற்றம் செய்யப்படின் இவ்வத்தரவு தானாகவே இரத்து செய்யப்படும். மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டும், பார்வை 1-ல் காணும் இராணிப்பேட்டை மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படியும், மேற்படி மனை எண்.01 முதல் 68-மனைகளுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கி இதன்வழி ஆணையிடப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனைகள்	
1.	நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2.	இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலை முடுக்கு பகுதி அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3.	மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4.	அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகளை தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5.	மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப்பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறே மாற்றி அமைக்க வேண்டும்.
6.	மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7.	7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8.	மனுதாரர், மனைப்பிரிவு தொடர்புடைய **தலைவர், பெருவளையம் ஊராட்சி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும்.** மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.
9.	மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும். மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையில் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.
10.	மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

Scanned with CamScanner

11.	நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு (Planning Permission / Concurrence) ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட (Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.
12.	விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: மனைப்பிரிவு வரைப்படம்.

தலைவர்
பெருமையன் ஊராட்சி
ஊராட்சி ஒன்றியம் காவேரிப்பாக்கம்

5.3.2024

பெறுநர்:

திரு.B.ருத்ரராஜன்,
No.8/1499, 1-வது பிரதான சாலை,
T.S.கிருஷ்ணா நகர்,
முகப்பேர், சென்னை - 600037.

நகல் பணிவு:

இணை இயக்குநர்/உதவி இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
'F' பிளாக் 4-வது தளம்,
ராணிப்பேட்டை - 632 401.

நகல் பணிவு: உதவி இயகுநர்(ஊராட்சி) இராணிப்பேட்டை.
நகல் பணிவு: வட்டார வளர்ச்சி அலுவலர், காவேரிப்பாக்கம்.
நகல் பணிவு : சார்பதிவாளர், காவேரிப்பாக்கம் - இராணிப்பேட்டை மாவட்டம்.

Scanned with CamScanner